## 3 அமைச்சர்கள் மீது மீண்டும் விசாரணை !

# உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தை நாடுவோம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, ஆக. 25**

**கீழமை நீதிமன்றங்களில் விடுவிக்கப்பட்டவர்கள் மீது உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்ததை எதிர்த்து உச்சநீதிமன்றத்தை நாடப் போவதாக திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார். மேலும் ஆர்.எஸ். பாரதி கூறுகையில், சென்னை உயர்நீதிமன்றம், 3 அமைச்சர்கள் மீதான வழக்குகளை தாமாக முன்வந்து விசாரிக்க முடிவு எடுத்துள்ளதாகவும், இது தொடர்பாக வெளிவரும் செய்திகள் திமுக மீதும், அரசு மீதும் களங்கம் ஏற்படுத்து வகையில் இருக்கிறது என்று தெரிவித்தார். உயர்நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தை நாடுவோம் என்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குறிப்பிட்டார்.**

**சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறுகையில் அவர் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்ற நீதிபதியான ஆனந்த் வெங்கடேஷ், திமுகவைச் சேர்ந்த அமைச்சர்கள் குறித்த வழக்குகளை மட்டும் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுப்பது ஏன்?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில், நேற்று மாலை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

“அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், சத்தியதேவ் என்ற நீதிபதி அரசுக்கு எதிர்ப்பான சில தீர்ப்புகள் வழங்கினார் என்பதற்காக அவரது வீட்டின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த ஏ.ஆர். லக்ஷ்மணனின் மருமகன் மீது கஞ்சா வழக்கு போடப்பட்டது. அதேபோல், நான் தொடர்ந்த டான்சி வழக்கை விசாரித்த நீதிபதி சிவப்பா, ஜெயலலிதாவின் மனுவை ஏற்காமல் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டதால், 2001ல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின்னர், அவர் பந்தாடப்பட்டார். அவர் பதவியையே ராஜினாமா செய்துவிட்டு போனார் என்பதெல்லாம் வரலாறு.

ஆனால், தி.மு.க. அப்போதே இந்த சம்பவங்களை எல்லாம் கண்டித்திருந்தது. இதுபோன்ற நடவடிக்கைகளில் அறவே நம்பிக்கை இல்லாத இயக்கம் தி.மு.க. எனவே, நீதிமன்றத்தின் மீது மிகுந்த நம்பிக்கையோடு இருக்கின்ற நாங்கள், கேட்டுக் கொள்வது, ஏற்கெனவே முடித்து வைக்கப்பட்ட வழக்குகளை தாமாக முன்வந்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

**எடப்பாடி பழனிசாமி மீதான வழக்கு!**

தி.மு.க. சார்பில் நான் தொடர்ந்த வழக்கு எடப்பாடி பழனிசாமி டெண்டரில் ரூ.3600 கோடிக்கு ஊழலும், முறைகேடுகளும் நடந்துள்ளன என்று 2018ல் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டார். உடனடியாக எடப்பாடி பழனிசாமி உச்ச நீதிமன்றம் சென்று தடை ஆணை பெற்றார். உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, இந்த வழக்கு மீண்டும் இதே நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு வந்தபோது, நீதிமன்ற நேரத்தை வீணடிக்கக்கூடாது என்று சொல்லி தீர்ப்பளித்திருந்தார். கடந்த 18.07.2023 அன்று இதே நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், ரூ.3600 கோடி அளவுக்கு ஊழல் நடந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்ற உத்தரவிடப்பட்ட ஒன்றில், நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கிற வேலை. நீதிமன்றத்தை அரசியலுக்கான விளையாட்டு மைதானமாக மாற்றாதீர்கள் என்று கூறியிருந்தார்.

ஆனால், இரண்டு வாரங்கள் கழித்து அதே நீதிபதி, வெறும் 44 லட்சம்



ரூபாய் சொத்துக்குவிப்பு வழக்கில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மீது வழக்கை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்து நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை செலவிடுவேன் என்று கூறியிருக்கிறார். அதேபோல பொன்முடி வழக்கில், அவர் மீது எந்த குற்றமும் இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டது. ஓரிரு நாட்கள் இல்லை, பல ஆண்டுகளாக நடைபெற்றது. விழுப்புரத்தில் இருந்து வேலூருக்கு மாற்றப்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதிகள்தான் அதற்கான உத்தரவை பிறப்பித்தனர். அதையெல்லாம் கேலி செய்யும் வகையில், கிண்டல் செய்யும் வகையில், இந்த தீர்ப்பு அமைந்திருக்கிறது.

இந்த வழக்குகளில் உயர் நீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகளை எல்லாம் மனதிலே கொள்ளாமல், வழக்கு விசாரணை நடத்தி, விடுவிக்கப்பட்ட ஒருவரை, தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ள நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் கூறியிருக்கிறார். அதே போல தங்கம் தென்னரசு ஏறத்தாழ, 74 லட்சம் ரூபாய் என்றால், நங்கநல்லூரில் 600 சதுரஅடி நிலம் வாங்கலாம். கே.கே.எஸ்.எஸ்.ஆர். ஒரு 400 சதுர அடி வாங்கலாம்.

**அ.தி.மு.க. அமைச்சர்கள் விடுவிக்கப்பட்டது எப்படி?**

இவர்கள் இருவர் மீதும் சென்னை உயர் நீதிமன்றம் தனது பொன்னான நேரத்தை செலவழித்து விசாரிக்கும் என்று நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் அறிவித்துள்ளார். இதை நிச்சயமாக உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் எடுத்து கூறுவோம். அதுமட்டுமல்ல, ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விஸ்வநாதன், வளர்மதி, அதிமுக அமைச்சர்களாக இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எந்த முகாந்திரத்தின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்களோ, அதே முகாந்திரத்தின் அடிப்படையில்தான் இவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இன்றைக்கும் ஓபிஎஸ் மற்றும் நத்தம் விஸ்வநாதன் எம்.எல்.ஏ.வாகத்தான் உள்ளனர். எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்ற நீதிபதியான அவர், குறிப்பிட்டு தேர்ந்தெடுத்து தி.மு.க.வைச் சேர்ந்த அமைச்சர்கள் குறித்த வழக்குகளை மட்டும் எடுத்து உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்கிறது என்றால், இதுபோல விசாரித்த நீதிமன்றமும், நீதிபதியும் இருக்கிறது. ஆனால், பாகுபாடு பார்த்து விசாரணைக்கு எடுக்கக்கூடாது என்பதுதான் விதி. எனவே, உச்ச நீதிமன்றத்தில் இதையெல்லாம் ஒரு கோரிக்கையாக வைத்து வாதிடுவோம். நீதிமன்றத்தின் மீது தி.மு.க.வுக்கு நம்பிக்கை உள்ளது. சட்ட ரீதியாக வழக்குகளை எதிர்கொள்வோம்”

மக்கள் மத்தியில் திமுக மீது களங்கம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே இந்த விளக்கம் தருகிறோம். பொதுமக்கள் மத்தியில் தவறான எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. மாநாட்டை விட, அமைச்சர் உதயநிதி தவறாக ஏதும் பேசவில்லை. அ.தி.மு.க. ஆட்சியின்போது ஏராளமானோர் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன. நீதிமன்றத்தை நாடி நல்ல தீர்ப்பை பெற்றுள்ளோம்.

இவ்வாறு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

---

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏண்ணே; பா.ஜ.க. ஆட்சி செய்யும் உத்தரப் பிரதேச மாநிலத்தில், பஞ்சாங்கத்தைக் கடைப்பிடிக்குமாறு காவல் துறையினருக்கு, டி.ஜி.பி. விஜயகுமார் சுற்றறிக்கை அனுப்பி இருக்கிறாராமே ?

**பட்டணம் : ஆமாம்; உ.பி. மாநில பா.ஜ.க. முதலமைச்சராக இருப்பவர் யோகி ஆதித்யநாத் சாமியார். அவர் பச்சைப் பழமைவாதி; மூட நம்பிக்கைகளின் மொத்த உருவம்.**

**அப்படிப்பட்ட முதலமைச்சரின் காவல் துறைத் தலைவராக இருக்கும் விஜயகுமார், பஞ்சாங்கத்தைப் பரப்பிடும் வகையில் சுற்றறிக்கை அனுப்பி இருப்பது, ஜாடிக்கேற்ற மூடி என்ற நிலைமைதான்.**

**டி.ஜி.பி. அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், “பொதுவாக குற்ற சம்பவங்கள் அமாவாசைக்கு ஒரு வாரம் முன்பும், அமாவாசைக்கு ஒரு சில நாள்களுக்குப் பின்பும்தான் அதிகமாக நிகழும். எனவே அதற்கேற்ப, மாதந்தோறும் அந்த நாட்களில் காவல் துறை கண்காணிப்பை அதிகரிக்குமாறு” கூறியிருக்கிறார்.**

**இந்திய அரசமைப்புச் சட்டத்தில், அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாக விஞ்ஞான மனப்பான்மை ( Scientific Temper ) வேண்டும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது.**

**அரசமைப்புச் சட்டம் என்பதை பா.ஜ.க.வினர் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் எடுத்துக் கொள்கிறார்கள் போலும் !**

**அவர்கள் அப்படி என்றால், அதிகாரிகள் அவர்களை அப்படியே அங்குலம் பிசகாமல் பின்பற்றுவது, கடமையிலிருந்து பிறழ்ந்து நடப்பதற்குச் சமம் !**

---

### திருமலைராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு

# கூடுதல் வகுப்பறைகள் - கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்படும்!

### மாணவர்களுக்கு விலையில்லாத மிதிவண்டிகளை வழங்கி அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*சின்னாளபட்டி, ஆக.25-*

அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களின்நலன் காப்பதில் தமிழக முதல்வர் அதிக அக்கறையுடன் செயல்படுகிறார் என்று திருமலைராயபுரத்தில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். திருமலை ராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் வசதி செய்து கொடுக்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் ஸ்ரீராமபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட திருமலை ராயபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவ - மாணவியர்கள் மற்றும் சுற்றியுள்ள கே.புதுக்கோட்டை, சுள்ளெறும்பு பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட திட்ட இயக்குநர் திலகவதி தலைமை தாங்கினார். ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க. சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, பேரூராட்சிமன்ற தலைவர் சகிலாராஜா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதன்மை கல்வி அலுவலர் நசாரூதீன் வரவேற்று பேசினார்.

விழாவில் பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கிவிட்டு தி.மு.க. மாநில துணைப்பொதுச் செயலாளரும், ஊரகவளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசும் போது இன்று தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் கல்வித்தரம் உயர்ந்துள்ளது. குறிப்பாக அரசு பள்ளியில்பயிலும் மாணவ - மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த நல்லாட்சியே என்றார்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அரசு பள்ளி மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். குக்கிராமமான இந்த கிராமத்தில் உள்ள அரசு பள்ளியில் 750க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர்கள் படிக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அரசு பள்ளியின் கல்வித்தரமே இங்கு பணிபுரியும் ஆசிரிய, ஆசிரியர்கள் தன் நலம் கருதாத சேவையால் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தி வருகிறார்கள் அதற்கு நான் மனதார பாராட்டுகிறேன். பள்ளி நிர்வாகம் சார்பாக தங்களுக்கு கூடுதல் வகுப்பறையும், கழிப்பறை வசதியும் வேண்டுமென்று கோரிக்கைவிடுத்துள்ளார்கள். அவற்றை உடனடியாக நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளேன். அதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்றார்.

நிகழ்ச்சியில் ரெட்டியார் சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவண், கிருஷ்ணன், ஸ்ரீராமபுரம் பேரூர்கழக செயலாளர் ராஜா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ்பெருமாள், முத்துக்குமார், பேரூராட்சிமன்ற துணைத்தலைவர் முருகேசன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய துணைச்செயலாளர் பொண்மணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண் ஜெகநாதன், ஒன்றியகுழு உறுப்பினர் திருப்பதி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், புதுப்பட்டி திமுக நிர்வாகி உதயக்குமார், கரிசல்பட்டி ஜோசப் ஆசான், ஸ்ரீராமபுரம் பேரூர்கழக துணைச்செயலாளர்கள் பால முருகன், சுகப்பிரியா, சாந்த குமார், பொருளாளர் துரையன், மாவட்ட பிரதிநிதிகள் குப்புச்சாமி, சாகுல்ஹமீது, எல்லை இராமகிருஷ்ணன், உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக தலைமையாசிரியர் சந்திராதேவி நன்றி கூறினார்.

---

### மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனை கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ படிவம் வழங்கி சிறப்புரை!

*திருவள்ளூர் ஆகஸ்ட் 25;*

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் பெரியாப்பாளையம் அருகே காக்கவாக்கம் கிராமத்தில் உள்ள கிரே சூட் ஓட்டலில் நேற்று நடந்தது. இதில் திருவள்ளூர் தி.மு.க. மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் வரவேற்றார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜெ.மூர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெ.மோகன்பாபு, எம்.முரளிதரன், டி.சங்கர் , செ.யுவராஜ் , இரா.கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல்மாலிக், பிரபுகஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.பின்னர் இளைஞரணி உறுப்பினர் படிவம் அமைப்பாளர்களிடம் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன . . .

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளை தேர்வு செய்தற்கு நன்றி ,

கலைஞரின் நூற்றாண்டு விழாவை இளைஞரணி சார்பில் கொண்டாடுவது,

இளைஞரணியின் 2 வது மாநில மாநாட்டு பணிகள் மற்றும் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர்கள் சேர்த்தல்

செப்டம்பர் 15 தேதி கும்மிடிபூண்டி மற்றும் பொன்னேரி தொகுதியில் கலைஞர் பயிலகம் திறப்பது ,

சந்திராயன் 3 , வீரமுத்துவேல் அவர்களுக்கு வாழ்த்துக்களும் நன்றியும் தெரிவிப்பது போன்ற பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்டம் ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, மாநில நிர்வாகிகள் அன்புவணன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவண், மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன் , ரமேஷ், வெங்கடாசலபதி, ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், நா.செல்வசேகரன் , ஜான்(எ)பொன்னுசாமி, இரா.அறிவழகன், அபிராமி குமாரவேல், தமிழ் உதயன், முத்து, அப்துல் ரஷீத், குமரவேல், தில்லை குமார், மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

---

### 8 பேருக்கு பணி நியமன ஆணை! 5 புதிய வாகனங்கள்! 31 பயனாளிகளுக்கு

# ஈரோடு மாவட்டத்தில் ரூ.59.78 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்!

*ஈரோடு, ஆக. 25-*

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 22.08.2023 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.63.91 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி குழுத் தலைவர்களின் பயன்பாட்டிற்காக புதிய ஈப்பு (Scorpio) வாகனங்களையும், பல்வேறு துறைகளின் சார்பில் 31 பயனாளிகளுக்கு ரூ.59.78 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும், கருணை அடிப்படையில் 8 நபர்களுக்கு பணி நியமன ஆணையினையும், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா தலைமையில், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம் மற்றும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈவெகிச. இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ஈரோடு மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் படி, 22.8.2023 அன்று வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், ரூ.63,91,383/ மதிப்பீட்டில் சத்தியமங்கலம், டி.என்.பாளையம், நம்பியூர், சென்னிமலை, பெருந்துறை ஆகிய 5 ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்களுக்கு புதியு ஈப்பு (Scorpio) வாகனங்களை வழங்கினார்.

தொடர்ந்து மகளிர் திட்டம் சார்பில், ரூ.15,50,000/ மதிப்பீட்டில் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 2 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கி கடனுதவியினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், மாற்றுத்திறனாளிகள் நல வாரிய சமூக பாதுகாப்பு திட்டத் தின் கீழ், 1 பயனாளிக்கு விபத்து மரண உதவித்தொகையாக ரூ.1,00,000/ மற்றும் 9 பயனாளிகளுக்கு தலா ரூ.17,000/ வீதம் ரூ.1,53,000/ இயற்கை மரண ஈமச்சடங்கு உதவித்தொகையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.7,500/ வீதம் 10 நபர்களுக்கு ரூ.75,000/ மதிப்பீட்டிலான தையல் இயந்திரங்களும் மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ், 8 பயனாளிகளுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ.40,00,000/ மதிப்பீட்டில் காப்பீட்டு திட்ட அட்டையினையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை (சமூக பாது காப்பு திட்டத்தின் கீழ்) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து சுற்றுச் சுவர் இடிந்து விழுந்து இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ.1,00,000/ நிதியுதவியினை யும் என 31 பயனாளிகளுக்கு ரூ.59,78,000/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் கருணை அடிப்படையில் 1 பயனாளிக்கு கிராம நிர்வாக அலுவலர் (மொடக்குறிச்சி வட்டம்) பணி நியமன ஆணையினையும் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை கள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில், கருணை அடிப்படையில் 7 பயனாளிகளுக்கு அங்கன்வாடி பணியாளர் பணி நியமன ஆணையினையும் வழங்கினார். மேலும், ஈரோடு மாவட்டத்தினை முன்னேற்றம் ஏற்படுத்துவதற்காக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதே போன்று அனைத்து துறைகளின் சார்பில் பொதுமக்களின் நலனுக்காக நலத்திட்ட உதவிகளும் நாள் தோறும் வழங்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் அரசு அளிக்கின்ற நலத்திட்ட உதவிகளை பெற்றுக் கொண்டு நல்ல முறையில் தங்கள் வாழ்க்கை தரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இ ந் நி க ழ் வி ன் பே ா து , அதிகாரிகள் சந்தோஷினி சந்திரா, மனிஷ் துணை மேயர் வே.செல்வராஜ், திட்ட இயக்குநர் மைக்கேல் (மகளிர் திட்டம்), செல்வராஜன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராஜகோபால், மாவட்ட பிற்படுத்தப்பட் டோர் நல அலுவலர் ரங்கநாதன், நல அலுலவர் திருமதி.கோதை செல்வி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.பூங்கோதை, ஈரோடு வட்டாட்சியர் ஜெய குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாகன நிறுத்த நடைமுறைகளை சிறப்பாக மேம்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், , கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர். லலிதா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!

